# செயற்திறன் அறிக்கை- 2022



**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

**(செலவுத் தலைப்பு இலக்கம் – 171)**

# உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்க இல. |
| --- | --- |
| **அத்தியாயம் 01** | |
| நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு | 01 - 23 |
| **அத்தியாயம் 02** | |
| முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் | 24 - 47 |
| **அத்தியாயம் 03** | |
| வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன் | 48 - 57 |
| Annexure I | i - xv |
| **அத்தியாயம் 04** | |
| செயற்திறன் சுட்டிகள் | 58 - 62 |
| **அத்தியாயம் 05** | |
| பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) அடைவதன் செயற்திறன் | 63 - 75 |
| **அத்தியாயம் 06** | |
| மனித வளத் தோற்றுவாய் | 76 - 81 |
| **அத்தியாயம் 07** | |
| இணக்க அறிக்கை | 82 - 98 |

# 01. முதலாம் அத்தியாம்

## நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1.1 மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள

### நோக்கு

**இலங்கைத் தனித்துவத்தைக் கொண்டதும், விளைதிறன்மிக்க பிரசைகளைக் கொண்டதுமான, குடும்பத்தின் மகிழ்ச்சி மற்றும் சமூக சமஅந்தஸ்தை உறுதி செய்கின்ற நிலைபேறான அபிவிருத்தியை அடையப்பெற்ற சுபீட்சமான தேசம்**

### செயற்பணி

**தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேவைகள் மற்றும் சர்வதேச தரநியமங்களைக் கவனத்தில் கொண்டு சிறுவர்கள் மற்றும் பெண்களை பொருளாதார, சமூக மற்றும் கல்விசார் அடிப்படையில் வலுவூட்டுவதற்குத் தேவையான சட்ட, நிறுவன, மனிதவளச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல், மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.**

## 1.1.2 பிரதான பணிகள

2015 – 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் முன்னோடி இலக்கொன்றாக இருப்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் மற்றும் பிள்ளைக்கும் பால்நிலைசார் பேதங்கள் இன்றி சமஅந்தஸ்துடன் வாழ்வதற்கு சமூக, பொருளாதார மற்றும் சட்டரீதியாகக் காணப்படுகின்ற தடைகளை நீக்கி அவர்களை அதற்கு வலுவூட்டுவதாகும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக, அதற்கு உதவும் பொருட்டு இலங்கை கட்டுப்பட்டுள்ள பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சமவாயங்கள் மற்றும் பிரகடனங்களை அமுல்படுத்துகின்ற அரச பொறிமுறையின் பிரதான தரப்பினர் என்ற வகையில் மகளிர் மற்றும் சிறுவர் விடயப்பொறுப்பு அமைச்சினால் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வது பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் மூலம் இலங்கை சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதி செய்தல் மற்றும் தமது அறிவு மற்றும் பலத்தை உச்சளவாகவும், நல்ல முறையிலும் பயன்படுத்தி சுய சக்தியின் மூலம் சவால்களுக்கு முகம் கொடுகக்கூடிய இலங்கை பெண்கள் பரம்பரைக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கு மற்றும் அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக செயற்படுகின்ற பிரதான பொறிமுறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலாயினும் நாடு முழுவதிலும் பரந்து வாழும் சிறுவர்களுக்குத் தேவையான சேவைகளை தரமான முறையில் மேம்படுத்துவதற்கும், மேற்படி சேவைகளை விஸ்தரிப்பதற்கும் மனித வள அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குமான பல செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு 2022 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் கீழ் நாட்டிலுள்ள பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் போசாக்கை மேம்படுத்தல் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களின் தொழில்சார் தனித்துவத்தை மதிப்பீடு செய்யும் வகையில் பொருளாதார ஆற்றல்களை வளர்ப்பதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தமையும் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக அவர்களுக்கு புதிய வாழ்வாதார மற்றும் தொழில்முயற்சிசார் அபிவிருத்திக்கு உச்சளவில் பங்களிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையும் நிறைவேற்றப்பட்ட முக்கிய செயற்பணிகளில் உள்ளடங்கும்.

மேலும்,நாட்டில் வாழும் பிள்ளைகளின் போசாக்கை மேம்படுத்தல், சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் இல்லங்களிலுள்ள பிள்ளைகளின் நலன்புரிக்காக மற்றும் அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகளின் பாதுகாப்புக்கான கொள்கைகள் மற்றும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்து அமுல்படுத்தல், துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் பிள்ளைகள் தொடர்பில் துரிதமாக செயற்பட்டு தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மேலுள்ள பணிகளின் தொடர்ச்சியான கண்காணிப்புச் செயன்முறைக்காக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக சிறுவர் அபிவிருத்தித் துறையின் முன்னேற்றத்திற்காக நாட்டிலுள்ள பிள்ளைகளுக்கு சாதகமான மற்றும் உணர்வுப்பூர்வமான விடயங்கள் தொடர்பில் அவசியமான சட்டங்கள், விதிகள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக மகிளர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவின் கீழ் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இலங்கை மகளிர் பணியகம், தேசிய மகளிர் குழு மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் (உலக வங்கி உதவி) ஆகியன முக்கிய செயற்பணிகளை ஆற்றிவருகின்றன.

## நோக்கங்கள

- பெண்கள் சமவாயத்தை அமுல்படுத்தல்.
- பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் நீக்குவது பற்றிய சீடோ சமவாயத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2017 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களில் 17 மற்றும் முதலாம் இலக்காக குறிப்பிடப்பட்டுள்ள வறுமையை சகல வகையிலும் சகல இடங்களிலிருந்தும் முடிவுக்குக் கொண்டுவருதல்.
- நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் 5 ஆம் இலக்கான பால்நிலைசார் சமூக அந்தஸ்தை அடைந்துகொள்ளல் மற்றும் பெண்கள், சிறுவர்களை வலுவூட்டல்.
- குடும்ப வன்முறையை ஒழிப்பதற்கான சட்டத்தை அமுல்படுத்தல்.பால் நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களை தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தை தத்துவமுள்ளதாக்குதல்.
- பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் பெண்களை வலுவூட்டுவதற்கான தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்தல்.
- பெண்கள் தொடர்பான விசேட துறைகளுக்கு கொள்கைகளை அமுல்படுத்தல்.
- பெண்களின் சமவாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ள பொறுப்புக்களை அடைந்துகொள்வதில் பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றத்தை பரிசோதித்தல் மற்றும் அதன் நோக்கங்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்.
- பெண்களை, குடும்பம், சமூகம் மற்றும் சேவை நிலையத்தில் பாரபட்சம் காட்டலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் பெண்கள், சிறுவர்களுக்கு சுநத்திரமாக வாழ்வதற்குத் தேவையான அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்ளையைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்.
- அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார்துறையின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வலையமைப்புச் செய்தல்.
- முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- முன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கும் ஏற்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான மனிதவள அபிவிருத்தி.

## 1.1.3 பிரதான பணிகள

- பெண்களை ஒரே வலையமைப்பின் கீழ் ஒழுங்குபடுத்தல், அவர்களை பொருளாதார ரீதியாக மற்றும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்கு உகந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- சகல வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பெண்களின் விசேட அம்சங்களை இனங்கண்டு அவர்களுக்கு உகந்தவாறுநாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்காளர்களாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பெண்களாக இருப்பதனால் அவர்கள் எதிர்நோக்கும் சமூக அசௌகரியங்களை தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு பாதிப்புக்களையும் எதிர்கொண்டுள்ள பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ஒட்டுமொத்த பெண்கள் பரம்பரையினதும் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை உயர் மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

- பெண்கள் ஒரே அமைப்பின் கீழ் இயங்கிவருவதற்காக (Smooth Functioning)சமுதாய அடிப்படையிலான மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பெண்களை ஒரே வலையமைப்பின் கீழ் ஒழுங்குபடுத்தல்.
- அச்சுறுத்தலுக்கு ஆளான மற்றும் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டும் (CEDAW)விசேட கருத்திட்டத்தை அமுல்படுத்தல்.
- பால் நிலை அடிப்படையில் ஏற்படுகின்ற பாரபட்சங்கள் பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் அவற்றை சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஆட்கள் அல்லது சபைகளிடம் உரிய நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்தல்.
- பெண்கள் சமவாயத்தில் உள்ளடங்கும் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பிலான முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது ஒட்டுமொத்த சேவைக்கு அரசின் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களிடம் ஆற்றுப்படுத்தல்.
- அவ்வாறான நடவடிக்கைகளை ஆய்வு செய்தல், உரிய நிருவாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மேற்படி அறிக்கைகளை நாட்டினுள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமவாயத்தில் உள்ளடங்குகின்றவாறு பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்டரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளின் மூலம் எழும் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- உரிய ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் சமவாயத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவுதல் மற்றும் குறித்த ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தங்களுக்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.
- பெண்களின் அந்தஸ்து பற்றி, விடயப்பொறுப்பு அமைச்சரினால் தேசிய மகளிர் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் தொடர்பாக அல்லது உகந்ததென்று கருதுவம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
- மாவட்ட மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்தல்
- ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கீழான பால்நிலைசார் மற்றும் பெண்கள் உரிமைகளுக்கான கருத்திட்டத்தை அமுல்படுத்தல்.

  - பால்நிலைசார் சமஅந்தஸ்தை உறுதி செய்து பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை தடுப்பதற்கும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுத்து அபிவிருத்தியின் சமமான பயன்களை பெற்றுக் கொள்ள வாய்ப்புச் செய்துகொடுப்பதையும் நோக்காகக் கொண்டு இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கென ரூ.மி. 6.9 ஆன ஏற்பாடு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் அமைச்சுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

  - பால்நிலைசார் அடிப்படையில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைத்தல் மற்றும் அதற்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற பொறிமுறை வினைத்திறன்மிக்க கூட்டு அணுகுமுறையின் ஊடாக கூட்டாக தமது சேவை பெறுவோருக்கு சேவை ஆற்றும் முறையியலை தயார் செய்வதை நோக்காகக் கொண்டு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பு மற்றும் அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழ் பால்நிலைசார் அடிப்படையில் துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ள வழிநடாத்தும் பொறிமுறை பற்றிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய கையேடு மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்டு 25 மாவட்டங்கள் மற்றும் 334 பிரதேச செயலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டதுடன், அதில் உள்ளடங்கும் விடயங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டும் ஒன்லையின் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த நடவடிக்கை மேற்கொண்டமை.

  - ஒன்லையின் முறையைப் பயன்படுத்திக் கொண்டு வெளிக்கள மட்டத்திலான அலுவலர்களுக்கு ஒன்றலையின் கருவிகளைப் பயன்படுத்துவது (Online platform such as zoom google meet, webex & Microsoft Teams) பற்றிய பரந்த அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒன்லையின் வீடியோ தொகுப்பு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயார் செய்யப்பட்டு கற்கை கையேடாக

Teleconferencing platforms என்ற பெயரில் 25 மாவட்டங்களுக்கும், 334 பிரதேச செயலகங்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டமை.

- ❖ சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல். அதன் கீழ்,

  - ➢ கட்டிளமைப் பருவ சிறுமியர்கள் சிறு வயதில் கர்ப்பமடைவதை தடுப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 79 இல் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகுகளின் வெளிக்கள அலுவலர்களுக்கான திறன் அபிவிருத்திக்கு ஒன்லையின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
  - ➢ சிறு வயதில் கர்ப்பமடைவதை தடுப்பது தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகுகளின் பதவியணியின் திறன் அபிவிருத்தி பயிற்சி மொடியுலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி பயிற்சி மொடியுல் குறித்த மாகாணங்களின் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டமை.

- ❖ கடும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சிறுவர்களை வரைபடமாக்கல்
  கடும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சிறுவர்களை இனங்காணல் மற்றும் மேற்படி அச்சுறுத்தலைக் கொண்ட காரணிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் குறித்த சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முறையான மற்றும் ஒழுங்கான அணுகுமுறையை அரச நிறுவனங்கள் பின்பற்றுவதை பிரதான நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைச்சினால் வழிகாட்டல் ஒன்றும் தயார் செய்யப்பட்டுள்ளது.

## 1.1.4 நிறுவன வடிவமைப்பு



## 1.1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்/ திணைக்களத்தின் பிரதான பிரிவுகள



## 1.1.6 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் / நிதியம

| | நிறுவனம் | நிதியம் |
|---|---|---|
| 1 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான நிதிகள் பேணிவரப்படுவதில்லை என்பதுடன், சகல நிதிசார் நடவடிக்கைகளும் திறைசேரியின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. |
| 2 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | நாட்டின் சிறுவர் பாதுகாப்புக்காக நிதி திரட்டும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம்<br>(1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 20 (2) பிரிவுக்கு அமைய திரட்டிய நிதியிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படக்கூடிய சகல நிதிகளும், அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள சகல தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகளையும் அமுல்படுத்தும் போது மற்றும் நிறைவேற்றும் போது அதிகாரசபைக்கு கிடைக்கின்ற சகல நிதிகள் மற்றும் பரிசுகள், அன்பளிப்புக்கள் அல்லது கொடையாக அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற சகல நிதிகளையும் உள்ளடக்கிய நிதியமாகும். |

## 1.1.7 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள

| கருத்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு வழங்கும் முகவராண்மை நிறுவனம் | கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் | கருத்திட்டக் காலஎல்லை |
|---|---|---|---|
| நிலைபேறான சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | செமாவுல் பூகோள மன்றம் | அமெ.டொ. 8 இலட்சம் | 2022-2026 |
| பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலை தடுப்பது சம்பந்தமான உதவிப் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர் அலகுகள் மற்றும் பெண்களை தடுத்து வைக்கும் நிலையங்களுக்கு CDMAதொலைபேசிகளைப் பெற்றுக் கொடுத்தல். | ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் | ரூ.மி. 5.339 | 2022.01.01 – 2022.12.31 |
| ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கீழ் பால்நிலைசார் சமஅந்தஸ்து, இனப்பெருக்க சுகாதாரத்திற்குள்ள உரிமை மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான கருத்திட்டம் | UNFPA -ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் | ரூ.மி. 6.9594 | 2022 சனவரி முதல் 2022 டிசம்பர் வரை |

| | | | |
|---|---|---|---|
| “பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சிநிரல்” எனும் கருத்திட்டம் | ஐக்கிய நாடுகளின் மகளிர் பிரிவு(UN Women) | ரூ.மி. 290.59 (2022 இற்கு) | 2020 – 2022 |
| தேசிய மட்டத்தில் ஆலோசனை தரவு முறைமையை தயார் செய்யும் முன்னோடிக் கருத்திட்டம் | ஆசிய மன்றம் | - | 2022.01.01 முதல் |
| பால்நிலைசார் சமஅந்தஸ்து, இனப்பெருக்க சுகாதாரத்திற்குள்ள உரிமை மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறையை பற்றிய<br>ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கருத்திட்டம் | UNFPA -ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் | ரூ.மி. 1.5077 | 2022 சனவரி முதல் 2022 டிசம்பர் வரை |
| உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவரும் அவசர உதவிக் கருத்திட்டம் - அச்சுறுத்தலான நிலையிலுள்ள பெண்கள், கட்டிளமைப் பருவ பிள்ளைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் அரவணைப்பு நிலையங்களில் அரவணைப்பைப் பெறுகின்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | ஆசிய அபிவிருத்தி வங்கி | - | 2022-2024 |
| பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான 24 மணி நேர இலவச தொலைபேசிச் சேவை | சார்க் அபிவிருத்தி நிதியம் | அ.டொ. 437, 950 | 2021 யூன் 30 முதல் 2022 யூன் 30 வரை |
| சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டம் (Social Protection of Children) | Save the Children | ரூ.மி. 12.222 (2022 ஆம் ஆண்டுக்கு) | 2021 – 2022 டிசம்பர் |

## 1.2 சமூக வலுவூட்டல் பிரிவு

### 1.2.1 பிரிவின் தொலைநோக்கு, பணிக்கூற்று

### தொலைநோக்கு

**2030 ஆம் ஆண்டளவில் வறுமை மற்றும் பசியற்ற இலங்கை.**

### பணிக்கூற்று

**மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், நுண்நிதிய வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், தொழில்சார்ந்த அறிவு மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதனூடாக பாதிக்கப்படக்கூடிய சமுதாயத்தினை வலுவூட்டுதல்.**

## 1.2.2 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2289/43 என்ற இலக்க மற்றும் 2022.07.22 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் வறுமையினை ஒழித்து, சௌபாக்யமான (சுபீட்சமான) தேசமொன்றினைக் கட்டியெழுப்பும் தொலைநோக்குடன், மக்களினை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கு உரிய சட்டதிட்டங்களின் பிரகாரம், சமூக வலுவூட்டல் விடயங்களுக்கான கொள்கைகளினை வகுப்பதற்கு உதவுதல், தேசியப் பாதீடு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களினை அமுலாக்குதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபை நிறுவனங்களின் விடயங்கள், செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பிலான கொள்கைசார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் அமைச்சின் கடமைப் பொறுப்பு என்பதுடன், திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் பின்வருமாறாகும்.

i. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)
ii. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
iii. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
iv. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
v. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)
vi. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)
vii. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
viii. கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)
ix. உளவளத்துணைப் பிரிவு

அதன் பிரகாரம், சமூகத்தில் வாழும் பின்தள்ளப்பட்ட நிலைமையிலுள்ள நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழல் மற்றும் வாய்ப்புக்களினை வழங்கி அவர்களினை அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதற்கு பின்வரும் இலக்கிடப்பட்ட குழுக்களுக்குச் சேவையினை வழங்குகிறது.

- குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்கள்
- அங்கவீனமுற்ற நபர்கள்
- முதியோர்கள்

இப்பிரதான இலக்கிடப்பட்ட குழுக்களின் மீது அதிக கவனத்தினைச் செலுத்தி, கடந்த வருடங்களினுள் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக குறைந்த வருமானப் பயனாளிகள் சமுதாயத்தின் வறுமையினைக் குறைத்து சுபீட்சமான தேசமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு இவ் அமைச்சினூடாக மிகப் பிரமாண்டமான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் இணை நிறுவனங்கள் செலவுத் தலைப்பு இலக்கம் 171 இன் கீழ் செயலாக்கப்படுவதுடன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் செலவுத் தலைப்பு இலக்கம் 331 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களம் செலவுத் தலைப்பு இலக்கம் 217 இன் கீழும் அமுலாக்கப்படுவதுடன், இச் செயற்திறன் அறிக்கையினூடாக செலவுத் தலைப்பு இலக்கம் 171 க்கான முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

## 1.2.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள்

(2022.07.22 ஆந் திகதிய 2289/43 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்)

அமைச்சின் பிரதான செயற்பாடு மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

- அரசினூடாக செயலாக்கப்படும் தேசிய கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் விடயம், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தானங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை, வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.

- விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு புதிய முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.
- அதிஉன்னதமான திறன்களினைக் கொண்ட பிள்ளைகளின் அத்திறன்களினை மேம்படுத்துவதற்கு நிதிசார் உதவிகளினை வழங்குதல்.
- சமுரத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் அத்தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.
- பொதுசன உதவி பிரேரணைகள் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் சிறந்த புதிய சீர்திருத்தங்களினை அறிமுகப்படுத்துதல்.
- காச நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள், தொழுநோயாளர்கள், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களில் சார்ந்திருப்பவர்களுக்கும் உதவிகளினை வழங்குதல்.
- குடும்ப உளவளத்துணை சேவைகளினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மரபுகள் தொடர்பான நடவடிக்கைகள்
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கும் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பொதுப் போக்குவரத்தில் இணைந்து செயற்படுவதற்கு இயலுமானவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
- முதியோர்களினைப் பராமரித்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதியோர்களின் பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

# 1.2.4 நிறுவனக் கட்டமைப்பு




ப.நா. (ச.அ.தி)- பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்)
ப.நா. (தே.ச.அ.நி.) - பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்)
மே.ப.நா. (ச.அ.தி)- மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்)
மே.ப.நா. (தே.ச.அ.நி.) -மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்)
சி.உ.செ. - சிரேஸ்ட உதவிச் செயலாளர்
உ.செ. - உதவிச் செயலாளர்
பி.ப. - பிரதிப் பணிப்பாளர்
உ.ப. - உதவிப் பணிப்பாளர்
பணிப். (கி.அ.ப.ஆ.நி.) - பணிப்பாளர்(கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்)
பி.பொ.மு. - பிரதிப் பொது முகாமையாளர்
அபி.உத் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

பணிப். (அபி) - பணிப்பாளர் (அபிவிருத்தி
பணிப் (திட்) - பணிப்பாளர் )திட்டமிடல்)
பணிப். (சௌ.மே.ப.) - பணிப்பாளர் ( சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்)
பி.கணக்காளர் -பிரதான கணக்காளர்
பி.உ.க. - பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
பணிப். (அ.ந. தே.செ.) - பணிப்பாளர் (அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்)
பணிப். (உள) - பணிப்பாளர் (உளவளத்துணை)
பணிப். (மு.தே.செ) - பணிப்பாளர் (முதியோர்களுக்கான தேசிய செயலகம்)
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்
அலு.பணி. - (அலுவலகப் பணியாளர்)

**1.2.5 சமூக வலுவூட்டல் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள்/ நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்.**



## 1.2.6 அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்.

### 1.2.6.1 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சமுர்த்திச் சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்ட இந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளாவன, 17 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்க சமுர்த்தி நலன்புரியினை வழங்குதல், சமூகப் பாதுகாப்பு நிதியத்தினூடாக அக்குடும்பங்களின் அன்றாட முக்கியமான தருணங்களில் பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிய கொடுப்பனவுகளினை வழங்குதல், இலங்கையில் வறுமையினை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு அக்குடும்பங்களினை வலுவூட்டுவதற்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 1089 சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக நாடுபூராவுமுள்ள அவ்வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களுக்குத் தேவையான பல்வேறான நுண்நிதியக் கடனினைத் திட்டமிடுதல், அதற்குமேலாக, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகளான மக்களினை ஒன்றாக இணைத்து சமுதாய அடிப்படை அமைப்புக்களின் வலையமைப்பொன்றினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல், அம்மக்களினை சமுதாய ரீதியில் வலுவூட்டுவதற்கு பின்வரும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் நோக்கங்களாகும்.

i. 1.76 மில்லியன் வறிய குடும்பங்களின் அன்றாட நுகர்வுத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு மாதாந்தம் பிரதானமாக 4 தொகுதிகளின் கீழ் (ரூபா. 4,500.00, ரூபா. 3,200.00, ரூபா. 1,900.00 மற்றும் ரூபா. 420.00 என்றவாறு) சமுர்த்தி நிவாரண உதவிகளினை வழங்குதல்.
ii. மேற்குறிப்பிட்ட வறிய குடும்பங்களின் பிறப்பிலிருந்து மரணம் வரையான விசேட தருணங்களில் சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
iii. சமுர்த்தி நிவாரண உதவிகளினைப் பெறும் குடும்பங்களின் உயர் கல்வியினைத் தொடரும் பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்கு மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா. 1,500/- என்றவாறு 24 மாத காலப்பகுதிக்கு புலமைப்பரிசில் உதவி நிதியினை வழங்குதல்.
iv. சமுர்த்தி நிவாரண உதவிபெறும் குடும்பங்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதற்கான தேவைகளினை இனங்கண்டு அதற்குப் பொருந்தும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
v. 30,211 சமுதாய அடிப்படை அமைப்புக்கள், 331 பிரதேச அமைப்புக்கள் மற்றும் 25 மாவட்ட அமைப்புக்களினை அமைப்பதனூடாக வறிய மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களினை இலக்கிட்டு பொருளாதார மற்றும் சமுதாய நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
vi. வறிய மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் நுண்நிதியக் கடன் தேவைகளினை இனங்கண்டு அவர்களுக்கு, 1073 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களினூடாக குறைந்த வட்டியுடனான நுண்நிதியக் கடன் சேவைகளினை அமுலாக்குதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலக்குகளினை வழங்குதல்.
vii. வீடொன்றினைக் கொண்டிராத வறிய குடும்பங்களின் வீட்டுத்தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா. 200,000/- தொடக்கம் 600,000/- வரையான நிதி உதயிவினை வழங்குதல்.
viii. வறிய குடும்பங்களினைப் போதையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு போதைப்பொருள் மீட்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், சமுர்த்தி குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியறிவினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், வறிய சமுதாயத்தின் உள நெருக்கீட்டினைத் தடுப்பதற்கு உளப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வறிய குடும்பங்களின் சமூக விருத்தியினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

### 1.2.6.2 சமூக சேவைகள் திணைக்களம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், எமது நாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள், வறிய குடும்பங்கள் மற்றும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படும் வேளையிலும் மற்றும் இடர்களுக்கு உட்படும் வேளையிலும் நிதிசார் உதவிகளினை வழங்குவதே ஆரம்பத்தில் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகவிருந்தது.

ஆரம்ப காலத்திலிருந்த இந்நிகழ்ச்சித் திட்டங்கள் காலத்தின் தேவைக்கேற்ப புதுப்பிக்கப்பட்டு. வழங்கப்பட்ட நிவாரணங்கள் சார்பு மனப்பான்மைக்கு மட்டுப்படுத்தப்படாது தனிநபர் அல்லது குடும்பத்தின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் மாற்றப்பட்டு. தற்போது சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பு நிறைவேற்றப்பட்டு வருகிறது.
ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட நிலைமைக்கு உட்பட்ட நாட்டின் மக்கள் பிரிவினருக்கு மிகவும் உன்னதமான சுற்றுச்சூழலொன்றினை கட்டியெழுப்பும் நோக்குடன் சமூக சேவைகள் திணைக்களம் உன்னதமான கடமைப் பொறுப்பொன்றினை நிறைவேற்றி வருகிறது.

**அச் செயற்பாடுகளாவன,**

i. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுய தொழில்களுக்கான வாழ்க்கைத் தொழில் கருவிகளினை வழங்குவதற்கு மற்றும் திறந்த சந்தை தொழில்களுக்கு அனுப்புதல்.
ii. அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் சந்தைகளினை அறிமுகப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்.
iii. அங்கவீனமுற்ற நபர்களின் காலத்தின் தேவைகள் மற்றும் நாட்டங்களினை இனங்காணுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
iv. விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பில் முன்கூட்டியே தலையீடு செய்வதனூடாக அவர்களினை ஒன்றிணைந்த கல்விக்கு முன்வைத்தல்.
v. செவிப்புலனற்றவர்களுக்கு அடையாள அட்டைகளினை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளினை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாடச் செயற்பாடுகளினை இலகுவாக்குதல்.
vi. பாதுகாவலர்களினை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு வாழ்நாள்பூராவும் பாதுகாப்பினை வழங்குதல்.
vii. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதல்.
viii. 60 வயதிற்குக் குறைந்த விழிப்புலனற்றவர்களுக்கு கண் வில்லைகளினை வழங்குதல், மருத்துவ உதவிகளினை வழங்குதல், விழிப்புலனற்றவர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு விளையாட்டுக்கள், கல்விசார் மற்றும் கலாசாரச் செயற்பாடுகளுக்கு உதவிகளினை வழங்குதல், அவர்களின் நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல் மற்றும் பிற நலன்புரிச் செயற்பாடுகள்.
ix. சமுதாய அடிப்படைப் புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளினை வழங்குதல்.
x. பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களினை அமைத்தல் மற்றும் வலுவூட்டுதல்.
xi. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

## 1.2.6.3 சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்

கிராமிய மக்களின் நேரடி உற்பத்திச் செயற்பாட்டிற்குத் தொடர்புபட்டு தேசிய உற்பத்தியினை அதிகரிப்பதற்கு சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினை செயலாக்குவதற்கு சௌபாக்யா உற்பத்திக் கிராம மேம்பாட்டுப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கிராமங்களிலும் காணப்படும் வளங்களின் கிடைக்கும் தன்மை, உற்பத்தித் திறன், சந்தை மற்றும் நிலைபேறானாக அமுலாக்கும் இயலுமையினை அடிப்படையாகக் கொண்டு, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களினை உற்பத்தி செய்யும் அல்லது சேவைகளினை வழங்கும் கிராமங்கள் உற்பத்திக் கிராமங்களாக மேம்படுத்தப்படுகின்றன.

### நோக்கங்கள்

i. உள்ளூர் உற்பத்திகளினை ஊக்குவித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்
ii. தற்போது காணப்படும் விசேட உற்பத்திகளினை வலுவூட்டுதல்
iii. தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதன் மூலம் தொழிலின்மையினைக் குறைத்தல்
iv. கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்று வருமான வழிகளினை உருவாக்குதல்.
v. தேசிய உற்பத்தியினை அதிகரித்தல்.

## மூலோபாயங்கள்

i. ஒரு உற்பத்திக்கான உள்ளீடுகளான மூலப் பொருட்கள், பொதியிடல் போன்றவற்றினை வேறு கிராமங்களினுள் உற்பத்தி செய்வதற்கு வலுவூட்டுதல்.
ii. பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் பயன்களுக்கு 50% அல்லது அதனிலும் அதிகமான பயன் பங்களிப்பு ஈடுசெய்யப்படுதல்.
iii. பயனாளியின் பங்களிப்பினை, நிதி வடிவிலோ, மூலதன வடிவிலோ வேறு உள்ளீடாகவோ வழங்க முடியும்.
iv. உற்பத்திக் கிராமத்தின் அனைத்துப் பயனாளிகளையும் உற்பத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களாக்குவதன் மூலம் ஒரு உற்பத்தி அலகாகச் செயற்படும் திறன்.
v. உற்பத்தியாளர்களுக்குப் பொதுவான பயன்பாட்டு உபகரணங்கள் மற்றும் பிற வசதிகளினை உற்பத்திச் சங்கத்திற்கு வழங்குவதனூடாக அதிகமான மக்கள் பயன்களினைப் பெறுவதற்கு வசதிகளினைச் செய்து கொடுத்தல்..

## 1.2.6.4 அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்துடன் தொடர்பிலான ஒழுங்குவிதிகளினை வழங்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கு நட்புடனான சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்குவதற்காக கொள்கைசார் தீர்மானங்களினை எடுப்பதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை அமைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாக,

i. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துவதற்கு, மீள் விருத்தி செய்வதற்கு மற்றும் பாதுகாப்பதற்குப் பொறுப்பு நிற்றல்.
ii. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் மீள்விருத்தி செய்தல் தொடர்பில் உரிய பங்குதாரர்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.
iii. உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், அரச, பிரத்தியேகத் துறைகள் மற்றும் அமைப்புக்களினை வினவி அங்கவீனமுற்ற நபர்களின் உண்மையான சம்பவம் மற்றும் உரிமைகளினை மேம்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளினையும் எடுத்தல்.
iv. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களினைப் பாதுகாப்பதற்காக பிரேரணைத் திட்டத்தினைப் பரிந்துரைத்தல்.
v. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்கஞ் செய்தல்.
vi. அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான சர்வதேசப் பிரகடனங்கள் மற்றும் உடன்படிக்கைகள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் மற்றும் பின்பற்றப்படுவதாகவும் பொறுப்பு நிற்றல்.
vii. அங்கவீனமுற்ற நபர்களுக்கு மிகவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்குப் பொறுப்பு நிற்றல்.
viii. அங்கவீனமுற்ற நபர்களினைப் பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுதல், அவற்றிற்கு உதவுதல், அச்செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
ix. அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு பௌதிக சூழலினை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை அறிமுகப்படுத்துதல், தகவல்களினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் மற்றும் தொடர்பாடலுக்கமான அணுகல், அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரேரணைத் திட்டத்தினைச் செயலாக்குதல்.

## 1.2.6.5 முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

இலங்கைவாழ் முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு மற்றும் கௌரவத்தினை உறுதிப்படுத்தி முதியோர் சமுதாயத்தின் நலன்புரி மற்றும் உரிமைகளினை மேம்படுத்துவதற்காக, 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக 16 அங்கத்தவர்களினைக் கொண்ட முதியோர்களுக்கான தேசிய சபைக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபையின் பணியினை நிறைவேற்றும்போது அதற்கு உதவும் பொருட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் அமைச்சரினை வினவி நியமிக்கப்படும் 12 அங்கத்தவர்களினைக் கொண்டு, முதியோர்களுக்கான தேசிய சபை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், உத்தியோகபூர்வமாக, சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் தவிசாளராகவும், அவ் அமைச்சின் மேலதிக செயலாளர் உப தவிசாளராகவும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் செயலாளராகவும், சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அங்கத்தவரொருவராகவும் நியமிக்கப்படுவர். அதன் பிரகாரம், முதியோர்களுக்கான தேசிய சபையின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 143 என்றபோதிலும், 2022 ஆம் ஆண்டிலிருந்து பதவியணி 127 என்பதுடன் அவை, பணிப்பாளர், கணக்காளர் (பதில்), உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர் (பதில்) என்றவாறு 04 நிறைவேற்று உத்தியோகத்தர்களும், 93 முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களும், 12 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களும், பிற 18 பதவியணி அங்கத்தவர்களும் உள்ளடங்குகின்றன. முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர், நிர்வாக உத்தியோகத்தராக (பதில்) கடமையாற்றுகின்றார்.

## நோக்கங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரதான பணியாகவிருப்பது, இலங்கையிலுள்ள முதியோர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளினை மேம்படுத்துதல், முதியோர்களுக்கு ஆத்ம திருப்தி, சுதந்திரம் மற்றும் கௌரவத்துடன் வாழ்வதற்கு வாய்ப்பினை செய்து கொடுப்பதாகும்.

## 1.2.6.6 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்பம் தொடர்பில் நோக்குவோமாயின், 1992 ஆம் ஆண்டில் சில தன்னார்வத் தொண்டு அமைப்புக்களின் பங்குகொள்ளலுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "சமூகப் பணி தொடர்பிலான நிறுவனமாகும்". 1964 ஆம் ஆண்டில் இது அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், "லங்கா சமூக சேவைகள் பாடசாலை" எனப் பெயரிடப்பட்டது. அதன் பின்னர் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், 1978 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்கும் நிறுவனமொன்றாக மாற்றப்பட்டது.

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க என்ற தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு நிறுவனத்தின் பின்வரும் நோக்கங்களினை எட்டச் செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

i. தொழில்வாண்மை சமூகப் பணிக்கல்வி, சமூக நலன்புரி முகாமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் உயர் பாடநெறிகளினை நடாத்துதல், மேம்பாடு மற்றும் அவற்றினைச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திற்குக் கொண்டு செல்லுதல்.
ii. பயிற்சிப் பாடநெறிகளினை விரிவுபடுத்துதல், வலுவூட்டுதல், சமூக நலன்புரி தொடர்பில் மனித வளத்தினை மேம்படுத்தும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அவற்றினை நடாத்துதல், குறைந்த பயன் பெறுபவர்களினை வலுவூட்டுதல், மனித திறன்கள் மற்றும் தொழில்வாண்மை மேம்பாட்டினூடாக நபர்களுக்கு மிகவும் சிறந்த வாழ்க்கை மட்டத்தினை வழங்குதல்.

iii. சமூகப் பணிக் கல்வி, பயிற்சி, சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்திக்கான ஆய்வுச் செயற்பாடுகள், மேம்பாடு மற்றும் முன்னெடுத்துச் செல்லுவதனூடாக சமூக அபிவிருத்தி துறையில் முன்னேற்றத்தினை வழங்குதல்.
iv. சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான கொள்கைகளினைத் தயாரிப்பதற்கும், திட்டமிடுவதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் தேவையான விசேட பங்களிப்பினை வழங்குதல்.
v. மேற்குறிப்பிட்ட சகல நோக்கங்களையும் வெற்றிகரமாக அடைவதற்குத் தேவையான நிதிசார் கல்வி, வர்த்தகம், மனித ஆற்றல் மற்றும் விசேடமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு நிரந்தரமான இடமொன்றினை ஸ்தாபித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளினை உள்ளடக்கி பிற வளங்களினைப் பெற்றுக் கொள்ளுதல்.

## 1.2.6.7 இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயலாக்கப்படும் அரச நியதிச்சபை நிறுவனமொன்றாகும்.

அரச சேவையில் ஒய்வூதியமற்ற சகலருக்கும் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களினை வழங்குதல் சபையின் கடமைப் பொறுப்பாகும். இங்கு சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், பிரத்தியேகத் துறையின் சேவையிலுள்ளோர், வெளிநாட்டுச் சேவையிலுள்ளோர், கலைஞர்கள் மற்றும் சுதேச வைத்தியர்கள் போன்ற சகல துறைக்கும் சேவைகளினை வழங்குதல் இதன் கடமைப் பொறுப்பாகும்.

**நோக்கங்கள்**

i. சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது, அக்காலத்தில் அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பினைச் செய்து கொடுத்தல்.
ii. சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
iii. சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
iv. சுய தொழில்களில் ஈடுபடும் இளைஞர்களினை வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
v. சிக்கனமாகவிருத்தல் மற்றும் வள முகாமைத்துவத்தின் பலாபலன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை விழிப்புணர்வூட்டுதல்.
vi. பொதுவாக சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

## 1.2.6.8 கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. 1978 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கப்பட்டப்பட்ட அல்லது ஓரங்கட்டப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான ஆற்றலினை உயர்த்தி, அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்ளுவதற்கு பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும்.

உற்பத்தியின்போது, விற்பனையின்போது, நுகர்வின்போது மற்றும் கடன் செயற்பாடுகளின்போது வறிய சமுதாயம் முகங்கொடுக்கும் பாதகமான நிலைமையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்கு தேவையான வலுவூட்டும் வினையூக்க செயல்முறை இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பொன்றாகும். பரிசோதனையின் மூலம் செயலில் கற்றல் செயல்முறை என்பது ஒரு சமூக உயிரோட்டமானது ஆகும். அதாவது முதியோர் கல்விக்கு ஒரு புதிய அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. பங்கேற்பு அபிவிருத்தி முறைமை இந்த நிறுவனம் இலங்கையின் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு நோக்கத்துடன் அனைத்து தேசிய மற்றும் உள்ளூர் அபிவிருத்தி திட்டங்களையும்

பொருத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயல்பாட்டில், செயலில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயல்முறை அடிப்படை அடிப்படையாக இருந்ததுடன், மேலும் செயலில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயல்முறை மூலம் உருவாக்கப்பட்ட பயிற்சி மாதிரிகளைப் பயன்படுத்தி, கிராம மற்றும் பிராந்திய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் சமுதாய அமைப்புக்கள், பணியாளர்களுக்குப் பயிற்சிளிப்பதன் மூலம், சமுதாயத்தினை வலுவூட்டுவதில் கவனஞ்செலுத்துகின்றன. மேலும், தற்போது, இந்த நிறுவனம் நடைமுறை திறன்கள் மற்றும் கல்வி அறிவு நிறைந்த மனித வளங்களைக் கொண்டுள்ளதுடன், நவீன வசதிகளுடன் கூடிய விரிவுரை அரங்குகள், விடுதிகள் மற்றும் நூலகங்கள் போன்ற பௌதிக வசதிகளுடன் உள்ளது. தலைமை அலுவலகம், மற்றும் பயிற்சி நிலையம் கொழும்பு 08, காசல் வீதி, இலக்கம் 24/4 என்ற இடத்தில் அமைந்துள்ளதுடன், கிராமிய அபிவிருத்தி மாவத்தை, பிளிமத்தலாவ என்ற முகவரியிலும் பயிற்சி நிலையமொன்று அமுலாக்கப்படுகிறது.

## 1.2.6.9 உளவளத்துணைப் பிரிவு

அவ்வேளை பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரி அமைச்சாக அமுலாக்கப்பட்ட இவ் அமைச்சின் கீழ் 2003 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் தலையீட்டுடன் உளவளத்துணை சேவையினை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவின் காரணமாக இவ் அமைச்சின் கீழ் உளவளத்துணைப் பிரிவு என்ற பெயரில் பிரிவொன்று அமைக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டில் புதிய பட்டதாரிகளினை ஆட்சேர்க்கும் தேசியக் கொள்கையின் பிரகாரம், திணைக்களம்சார் பதவியொன்றாக “உளவளத்துணை உதவியாளர்” என்ற பெயரில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உளவளத்துணை தலையீட்டின் செயற்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அவ்வப்போது பல்வேறு கொள்கைகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இதுவரையில் கடமையாற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 209 ஆகும். (உளவியல் உளவளத்துணை உத்தியோகத்தர்கள் 87 மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை) எண்ணிக்கை 122 ஆகும்.). அவர்கள் தலைமை அலுவலகத்திற்கும், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டு சேவைகளினை வழங்குதல் இடம்பெற்று வருகிறது.

சமுதாயம் உளக்கோளாறுகளினால் பாதிக்கப்படுவதைக் குறைத்தல், உளவளத்துணைக் களத்துறையில் புதிய நூதனங்களினைப் பாவித்துத் தரமான உளவளத்துணை சேவைகளினை வழங்குதல், உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களுக்கிடையே முறைசார் தொடர்பொன்றினை ஏற்படுத்துதல், உளவளத்துனை சேவைகளினை வழங்குதல் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் இப்பிரிவின் நோக்கங்களாகும். அதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

i. கிராமியச் சமுதாயத்தினை வலுவூட்டுவதற்கு உளவளத்துணையினைப் பயன்படுத்துதல் மற்றும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
ii. சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுதாயப் பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு கிராமங்களின் பயனாளிகளினை உளம், பொருளாதாரம், சமுதாயம் மற்றும் ஆன்மீகம்சார் வகையில் வலுவூட்டுவதற்கு உளவியல் உளவளத்துணை தலையீட்டினை முன்னெடுத்தல்.
iii. மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் உளவளத்துணை சேவை நிலையங்களினை அமைத்தல் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களினை ஈடுபடுத்துதல்.
iv. உளவியல் பிரச்சினைகளினைக் குறைப்பதற்கு அபிவிருத்திசார் மற்றும் நிவாரணம்சார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
v. இயற்கை மற்றும் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட அநர்த்தங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு அநர்த்த உளவளத்துணை சிகிச்சைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
vi. உளவியல் உளவளத்துணை, உளச் சிகிச்சை மற்றும் அதன் பயன்கள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சிரேஸ்ட பிரஜைகள், இளைஞர் யுவதிகள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகளினை விழிப்புணர்வூட்டுவதனூடாக உளவளத்துணை சேவைகளினை விரிவுபடுத்துதல்.
vii. உளவளத்துணை சேவைத் தேவைப்பாடுகளினைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினை வழங்குதல். (வைத்திசயாலை, சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள்)

viii. உளவளத்துணை சேவையின் உதவியினைப் பெறுவதற்கு தேவையினைக் கொண்டபோதிலும் அலுவலகத்தில் உத்தியோகத்தரினைச் சந்திப்பதற்கு இயலாத வேளையில், சேவையினைப்பெறுவதற்கு வசதிகளினை செய்து கொடுப்பதற்காக 24 மணிநேர கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை சேவையினை அமுலாக்குதல்.
ix. உளவளத்துணை சேவைகளினை வழங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல்.
x. உளவளத்துணை துறையில் கோட்பாடு மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்காக அச்சிடப்பட்ட வெளியீடுகளினை (சிங்களம் மற்றும் தமிழ் ஊடகங்கள்) வழங்குதல்.

## 1.2.6.10 நிர்வாகப் பிரிவு

அமைச்சின் நிர்வாகம், தாபனம், போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகளினை இயக்குதல் மற்றும் அமுலாக்குதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் தாபனம்சார் செயற்பாடுகளினை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல் பின்வரும் நோக்கங்களினைக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது. .

i. அமைச்சினதும் மற்றும் அப்பிரிவுக்கு உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகம்சார் செயற்பாடுகளினை இயக்குதல்.
ii. உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியினை வழங்குவதனூடாக மனிதவளத் திறனினை மேம்படுத்துதல்.
iii. அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சட்டவரைவுகள் போன்றவற்றினை சரியானவாறு முன்வைப்பதனூடாக கொள்கை வகுத்தலுக்குப் பங்காற்றுதல்.
iv. அமைச்சின் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
v. அமைசுக்கு உரித்தான சகல நிறுவனங்களினையும் ஒருங்கிணைத்தல்.
vi. அமைச்சுக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் மனித வள அபிவிருத்தித் திறன்களினை மேம்படுத்துதல்.

02/2018 என்ற இலக்க மற்றும் 2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் பிரகாரம், இலங்கையில் அரச சேவையினூடாக மையமாக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் மனித வளங்களினை வினைத்திறனாகவும், தரமானதாகவும் மற்றும் விளைத்திறனானகவும் நாட்டின் அபிவிருத்திக்கு மூலதனமொன்றாக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளவாறு மேம்படுத்தும் பொருட்டு அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஒட்டுமொத்த பதவியணியின் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயப்பரப்புடன் தொடர்பிலான கடமைகளினை சரிவர நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சிகளினை சரியானவாறு அடையாளம்கண்டு அப்பயிற்சி வழங்குதலினை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வழங்குதல், சகல உத்தியோகத்தர்களுக்கும் வருடாந்தம் ஆகக்குறைந்தது 12 மணிநேரத்திற்குக் குறையாத பயிற்சியளிப்பதற்கு வாய்ப்பினை செய்து கொடுத்தல், சகல அரச நிறுவனங்களினாலும் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடொன்றாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்நோக்கங்களினை நிறைவேற்றுவதற்காக, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்களினை எட்டச் செய்து அதன் செயற்திறனினை மேம்படுத்துவதற்கு இராஜாங்க அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் மனிதவளப் பெறுமதிகளினை மூலதனமாக மேம்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களின் விடய அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி மற்றும் ஆன்மீகம்சார் விருத்தியினூடாக அவர்களின் சேவைகளினை விளைத்திறனாகவும், விளைத்திறனாகவும் மற்றும் தரமானவாறும் பயன்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

### 1.2.6.11 கணக்குகள் பிரிவு

அமைச்சுக்கான தொழிற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் வருடாந்த ஒதுக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினை முன்னெடுத்தல், அரச கணக்குகளினை முன்னெடுத்து, வெளிப்படைத் தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களினை, நிதி ஒழுக்காற்றுடன் முன்னெடுத்துச் செல்லுதல் கணக்குகள் பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இதில், பிரதான நிதி உத்தியோகத்தரினதும் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் வழிகாட்டுதல், முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் செயற்படுத்தலினூடாக கணக்கீட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரச சுற்றுநிரூபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

i. அமைச்சுக்கு உரித்தான ஒட்டுமொத்த வருடாந்த பாதீட்டு ஆவணத்தினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்திற்கு முன்னராக தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
ii. சகல கொடுகல் வாங்கல்களினை சரியானதாக நாளதுவரைப்படுத்தி கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளினை முன்வைத்தல்.
iii. நிதிக்கொள்கைகளினைத் திட்டமிடுதல் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை வலுவூட்டுவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
iv. சகல கிடைப்பனவுகள், செலவுகளினைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளினைக் கட்டுப்படுத்துதல்.
v. செலவுகளினை மீளாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளினை முன்வைத்தல்.
vi. பொதுத்திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளினை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
vii. சகல கொள்வனவுச் செயற்பாடுகளின்போது வெளிப்படைத்தன்மையுடனான கொள்முதல் ந டைமுறையினூடாக நிதி ஒழுங்குகளினை சரியானவாறு அமுலாக்குதல் மற்றும் உதவுதல்.
viii. நாடுபூராவும் சிதறியுள்ள நிவாரண உதவிகளினைப் பெறும் பயனாளிகளின் பயன்களினை குறிப்பிட்ட தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு அவர்களுக்கு வழங்குவதற்கு ஒத்துழைப்பினை வழங்குதல்.
ix. அமைச்சின் கீழுள்ள அரச சொத்துக்களினை நாளதுவரைப்படுத்துதல், வருமானங்களினைச் சேகரித்தல் மற்றும் கண்காணித்தல்.
x. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களின் நிதி மற்றும் கணக்குச் செயற்பாடுகளினைச் சரியாக முன்னெடுப்பதற்கு உதவுதல்.

### 1.2.6.12 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133 மற்றும் 134 பிரிவுகளில் குறிப்பிட்ட கடமைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டலின் ஆலோசனைகள் அதேபோல 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் VII வது பகுதியின் 40 வது பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளருக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கு கடப்பாட்டினைக் கொண்ட பிரதான உள்ளகக் ககணக்காய்வாளரின் கீழ் செயலாக்கப்படுகிறது.
அதேபோல நிறுவனத்தின் நோக்கங்களினை முன்னெடுக்கும்போது நிதியினைத் திட்டமிடுதல், உள்ளகக் கட்டுப்பாடுகள், புத்தகங்கள் மற்றும் கணக்குகளினைச் சரியானவாறு முன்னெடுத்துச் செல்லுதல், நிதி முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் தகவல்களினை வழங்கும் திட்டம் வினைத்திறனாக இடம்பெறுவதாக உறுதிப்படுத்துதல் இப்பிரிவின் நோக்கமாகும்.

### 1.2.6.13 திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவு மற்றும் அதன் கீழ் முன்னெடுக்கப்படும் திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினை திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களிசை செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் மற்றும் பிற நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித்

திட்டங்களினை ஒருங்கிணைத்தல், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு விடயப் பரப்பின் கீழ் இடம்பெறுகிறது.

## 1.2.6.14 அபிவிருத்திப் பிரிவுகள் (I, II, III)

அபிவிருத்திப் பிரிவுகள் 3 ஆக செயலாக்கப்படுவதுடன், அந்நிறுனங்களின் தலைவர்கள் மேலதிக செயலாளர்கள் ஆவர். அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினூடாக அமுலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கண்காணிப்பு, வழிகாட்டல் மற்றும் மற்றும் அமைச்சுடன் ஒருங்கிணைத்தல், இப்பிரிவுகளின் பிரதான கடமைப்பொறுப்பு என்பதுடன் பின்வருமாறு அபிவிருத்திப் பிரிவுகள் தொடர்பிலான நிறுவனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

- அபிவிருத்திப் பிரிவு I – சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
  சமூக சேவைகள் திணைக்களம்

  அபிவிருத்திப் பிரிவு II – அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்
  முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்
  சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்

- அபிவிருத்திப் பிரிவு III – இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

  கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்
  உளவளத்துணைப் பிரிவு

# அத்தியாயம் 02
# முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

## 2.1 நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

### 2.1.1 விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

#### விசேட

1. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா 20,0000 ஆன போசாக்குக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
2. பாலர் பாடசாலை பிள்ளைகள்/முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
3. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
4. முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
5. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
6. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள்/பாலர் பாடசாலைகளுக்கு கற்கை வட்டம் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
7. “அருன தக்கின ரட்டா” முன்பிள்ளைப் பருவ சிறுவர்களின் சித்திரக் கண்காட்சி மற்றும் செயலமர்வை நடாத்தல்.
8. முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழுக் கூட்டங்களை நடாத்தல். (முன்பிள்ளைப் பருவ கல்வி பற்றிய தேசியக் குழு மனித வள அபிவிருத்தியின் முக்கிய கால எல்லையான முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வயது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி முன்பிள்ளைப் பருவ கல்வி பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்வதை தேசிய கல்வி ஆணைக்குழு நிறைவு செய்துள்ளதனால் இந்தக் கல்விக் கொள்கை பற்றிய சகல மாகாண செயலாளர்கள், தேசயி குழு உறுப்பினர்கள், மாகாண பாலர் பாடசாலை அலகுகளின் தலைவர்கள் மற்றும் சகல தரப்பினர்களையும் விழிப்புணர்வூட்டுவது தொடர்பாக 2022.09.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்திற்கு ரூ.மி. 0.074 செலவிடப்பட்டது.)
9. வீடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய கருத்திட்டத்தை அமுல்படுத்தல்.
10. ‘செனெஹெ தட்டாக்க’ பெற்றோரை விழிப்புணர்வூட்டுவதற்காக பங்கேட்பு புதிய எண்ணக்கருவுக்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
11. ‘மாத்ரு அபிமானி’ நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
12. கூட்டு சிறுவர் மற்றும் மகளிர் மாதிரிக் கிராமங்களை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
13. திடீர் அனர்த்த நிலைமைகளின் போது முன்பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
14. சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

| கருத்திட்டம் /பணி | நிதிசார் இலக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) (2022.12.31வரை) | பௌதீக இலக்க | பௌதீக முன்னேற்றம் (2022.12.31 வரை) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா 20,0000 ஆன போசாக்குக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 4000.00 | 3690.130 | 2000000 | 1583179 (அண்ணலவாக பகிர்ந்தளிக்கப்பட்ட போசாக்கு பொதிகளின் எண்ணிக்கை) | அண்ணலவாக கர்ப்பிணித் தாய்மார் 158317 |
| பாலர் பாடசாலை பிள்ளைகள்/ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | 150.00 | 147.753 | பாலர் பாடசாலை பிள்ளைகள்90203 | பாலர் பாடசாலை பிள்ளைகள் 76964 | பாலர் பாடசாலை பிள்ளைகள்76964 |
| பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 'குரு அபிமானி' மாதாந்தம் ரூபா 2500/- ஆன தொகையை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | 500.00 | 445.639 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 16275 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 15726 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 15726 |

15. தேசிய மகளிர் குழுவை அரச கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மாற்றியமைத்தல்.
16. இளம் தாய்மாரின் பங்களிப்பை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் சிறு பராய பிள்ளைகளின் போசாக்கு, ஆளுமை விருத்தி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் உபாயமுறைகளைக் கொண்ட தேசிய கொள்கையை தயார் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்ட கொள்கைசார் கலந்துரையாடலை நடாத்தல்.
17. பொருளாதார ரீதியாக பலமடைவதற்காக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசிய கொள்கையை தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
18. மகிழச்சிகரமான குடும்பம் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
19. பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச 16 நாள் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தல்
20. கலந்தாராய்கை/விழிப்புணர்வூட்டல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல். (பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் போது பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல், பொதுப் போக்குரத்தின் போது இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைப்பதற்கான 'யாவருக்கும் அழகிய பயணம்' நிகழ்ச்சித்திட்டம், புலம்பெயர் பெண்களின் குடும்பங்களின் சிறுவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து பாலியல் கல்வியை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம், மேலதிக வகுப்புக்கள் உட்பட உயர் கல்வி நிறுவனங்களின் சிறுவர்களை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (சைபர் குற்றச் செயல்கள், பொதுப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள், இனப்பெருக்க சுகாதாரக் கல்வி) விவாகத்துக்கு முன்னரான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், சேவை நிலையத்தில் இடம்பெறுகின்ற வன்முறைக்கு எதிராக எழுந்திருப்பது பற்றிய ஊழியர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், தோட்டத்துறை சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்)
21. பெண்களின் அரசியல் பங்கேட்பை மேம்படுத்தல்

- பாராளுமன்ற மற்றும் மாகாண சபைகள் தேர்தலில் பெண்களுக்கான பங்கீட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

## வெற்றிகள்

1. சிறுவர் மற்றும் மகளிர் துறையில் அமைச்சின் சேவைகளை விளைதிறன்மிக்கவாறும், வினைத்திறன்மிக்கவாறும் நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை வலுவூட்டல் மற்றும் தேசிய மட்டத்திலிருந்து மாவட்ட, பிரதேச மட்டம் வரை செயற்பாட்டு மற்றும் மதிப்பீட்டு முறையியல்களை அமுல்படுத்த முடிந்தமை.
2. சுஹுருலிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியமை.
3. ஈ-சந்தை – ஒன்லையின் சந்தைப்படுத்தல் மேடை
4. ஆசிய அபிவிருத்தி வங்கிக் கருத்திட்டம் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவுக்கான ஒருங்கிணைப்பு.
5. சூட்டிகை செயற்பணிச் சேவை நிலையம்
6. 2023-2027 காலப்பகுதிக்கு இலங்கையில் பால்நிலைசார் துன்புறுத்தலை குறைப்பது பற்றிக் கவனம் செலுத்துவதற்கு ஐந்து வருட இரண்டாவது தேசிய செயற்றிட்டத்தை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பங்கேட்புடன் தயார் செய்வது 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
7. பாராளுமன்ற மகளிர் சங்கத்தின் ஊடாக அமைச்சு பிரவேசிக்க முடியாதுள்ள துறைகள் பற்றிக் கவனம் செலுத்தியமை மற்றும் அதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்.
8. மாகாண சபைகள் மற்றும் தேசிய மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான உபாயமுறைகள் பிரேரிக்கப்பட்டுள்ளமை.

## சவால்கள் மற்றும் எிதர்கால இலக்குகள் சவால்கள்

1. சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினதும் முன்னேற்றத்தை இலத்திரனியல் தரவு முறைமை ஊடாக பெற்றுக் கொள்ளல்.
2. 2022 ஆம் ஆண்டில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து தேசிய மகளிர் குழுவின் வருடாந்த செயற்றிட்டத்தின் செயற்பாடுகளை எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்வது கடினமானதாக இருந்தது. எனினும் ஆண்டின் இறுதியளவில் திருத்தங்களுடன் செயற்றிட்டத்தின் பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றி முடிக்க இயலுமாயிற்று.
3. இன்றைய சமூக மாற்றங்கள் காரணமாக சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பில் காணப்படும் கவனம், பாதுகாப்பு மற்றும் உணர்வுப்பூர்வமானதன்மை குறைவடைந்து வருகின்றது. இந்த நிலைமையின் கீழ் மென்மேலும் அச்சுறுத்தலுக்கு ஆளாவது பிள்ளைகளும், சிறுவர்களுமாவார்கள்.
4. 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் திட்டமிடப்பட்ட ஒரு சில செயற்பாடுகளை முறையாக நிறைவேற்ற முடியவில்லை. மேலும் 2023 ஆம் ஆண்டு நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமையையும் நல்ல முறையில் புரிந்துகொண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குக் கிடைத்துள்ள அரச ஏற்பாடுகள் குறைந்த மட்டத்தில் உள்ள போதிலும் அவற்றை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறும், தேவைகளை சரியாக நிச்சயித்துக் கொண்டு பெண்கள் மற்றும் சிறுவர்களின் அபிவிருத்திக்கும் பயன்டுத்திக் கொள்வது சவாலாக உள்ளது.
5. மேலும்,பெண்கள் மற்றும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல், பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய கட்டாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான மேலதிக ஏற்பாடுகளை அரச சார்பற்ற தரப்பினர்கள் அல்லது அனுசரணையாளர்களிடமிருந்து பங்களிப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாக உள்ளமை.

## எதிர்கால இலக்குகள்

1. தேசிய மகளிர் குழுவை சுயாதீன நிறுவனமொன்றாக மாற்றியமைத்தல்.
2. பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை தேர்தலில் பெண்களுக்கான பங்கீட்டை பெற்றுக் கொடுத்தல்.
3. இளம் தாய்மாருக்கு நெகிழ்வான வேலைச் சூழலை ஏற்படுத்தல்.
4. குடும்ப வன்முறை சட்டம் பற்றி சமுதாயத்தின் விழிப்புணர்வை வளர்ப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
5. சைபர் குற்றச் செயல்கள் தொடர்பாக இளம் சமுதாயத்தினரின் விழிப்புணர்வை வளர்ப்பதன் மூலம் சைபர் குற்றச் செயல்களை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
6. பாடசாலைகளை ஆலோசனை வழங்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் அவர்களின் சேவையை மென்மேலும் வினைத்திறன்மிக்கதாக்குதல் மற்றும் விளைதிறன்மிக்கதாக்குதல்.
7. தற்போது வரைவு தயார் செய்யப்பட்டுள்ள தேசிய மகளிர் ஆணைக்குழு சட்டம், மகளிர் வலுவூட்டல் சட்டம் மற்றும் பால்நிலைசார் சமஅந்தஸ்து சட்டத்தை தயார் செய்து தத்துவமுள்ளதாக்கத் தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டில் இதனை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
8. அமைச்சின் வெளிக்கள அலுவலர்களுக்காக தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள அச்சுறுத்தலான சிறுவர்களை வரைபடமாக்கல் பற்றிய வழிகாட்டல் தொகுப்பைப் பயன்படுத்தி, அச்சுறுத்தலான நிலைமையிலுள்ள சிறுவர்களை முன்னதாகவே இனங்கண்டு அவர்களை அந்நிலைமையிலிருந்து விடுவித்துக் கொள்ளத் தேவையான சேவைகளை வழங்கும் தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்று வெற்றிகரமாக முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
9. தமது அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்துகொள்வதற்கு சுயமாக எழுந்திருக்கக்கூடியவாறு பலமான ஆளுமையைக் கொண்ட சமுதாயத்தை கிராமிய மட்டத்தில் உருவாக்குவதற்காக சமுதாயத்தை வலுவூட்டும் எண்ணக்கருவை எமது வெளிக்கள அலுவலர்கள் ஊடாக சுமார் 50 கிராமங்களில் கீழ் மட்டத்தில் மக்களுக்கு அறிமுகம் செய்து வருவதுடன், இதனை மென்மேலும் விஸ்தரிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
10. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஏற்பாடுகள் அவசர உதவிக் கருத்திட்டத்தின் கீழ் 2023 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ‘‘பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களுக்கான உதவிச் சேவைப் பொறிமுறை மற்றும் வழிப்படுத்தல் முறைமை’’யை வலுவூட்டுவதற்கும், அதன் மூலம் அச்சுறுத்தலான குடும்பங்களை கிராமிய மட்டத்தில் இனங்காண்பதற்கும் குடும்ப வன்முறை மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து விடுவித்துக் கொள்வதற்குமாக கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த உதவித் திட்டத்தின் கீழ் அதிக அச்சுறுத்தலான சிறுவர்களை வரைபடமாக்கும் வழிகாட்டல்களை வெளியிட்டு வைப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாவட்டங்களினதும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் அனைத்திலும் முன்னோடிக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், தொழில்முயற்சியாளர்களுக்கு இடையே பெண்களின் பங்களிப்பை வளர்ப்பதும்.
11. தனியார் துறை தொழில்முயற்சியாளர்களுக்கு இடையே பெண்களின் பங்களிப்பை வளர்த்தல்.
12. அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.
13. தொழில்வாய்ப்புக்குச் செல்லாத பெண்களை பல்வேறு தொழில்முயற்சிகளிலும் ஈடுபடுத்துவதற்கு அவசியமான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு வியாபாரப் பயிற்சி மற்றும் சந்தை ஒருங்கிணைப்புக்கு முறையான முறையியலை அரச தலையீட்டுடன் தயார் செய்தல்.
14. ஒழுங்குறுத்தப்படாத நுண் நிதித் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமியப் பெண்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
15. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்.

16. அடிக்கடி அனர்த்த அபாயத்தை எதிர்கொள்ளும் ஆட்களுக்கு விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான அரவணைப்பு மற்றும் வசதிகளை செய்துகொடுப்பதற்கும், அசௌகரியங்களை குறைப்பதற்குமான நிரந்தர வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்.
17. ஆரோக்கியமான பிள்ளையொன்றை பெற்றெடுத்தல், தாய்ப்பாசத்துடன் பிள்ளைகளை வளர்த்தல் மற்றும் பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதற்கு பெண்களுக்குத் தேவையான அறிவு, திறமைகள் மற்றும் நேரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான முறையியலை தாபித்தல்.
18. பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களில் தலைமைத்துவத்தைக் கொண்டுள்ள பெண்கள் மற்றும் வெளிநாடு செல்லும் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் மாற்று வருமான வழிமுறைகளை அமுல்படுத்தல்.
19. பாலர் பாடசாலைகளை பதிவு செய்தல் மற்றும் பாலர் பாடசாலை தகவல்களை இற்றைப்படுத்துவதற்கான முகாமைத்துவ தகவல் முறைமையை தயார் செய்தல் (கல்வி அமைச்சுடன் இணைந்த கருத்திட்டமாகும்.)

## 2.2 சமூக வலுவூட்டல் பிரிவு

## 2.2.1 விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### I. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்

### நிதி முன்னேற்றம்

| | |
|---|---|
| வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவு ரூ.மி. | 1,350.00 |
| செலவு ரூ.மி. | 1,271.38 |

### பௌதிக முன்னேற்றம்

i. 2 புதிய உற்பத்திக் கிராமங்களினை உருவாக்குதல் மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் 21 உற்பத்திக் கிராமங்களினை மேம்படுத்துதல்.

ii. 04 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

iii. 2021 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் ரூபா. 1240.12 மில்லியன் கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவினை வழங்குதல்.

### விசேட சாதனைகள்

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொறோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி மத்தியிலும்கூட, பல நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டமாக இருந்த சௌபாக்யா உற்பத்தி கிராமங்களை நிறுவுதல் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு நிறுவப்பட்ட உற்பத்திக் கிராமங்களில் சில உற்பத்திக் கிராமங்கள் ஏற்கனவே தங்கள் பொருட்களை ஏற்றுமதி சந்தைக்கு வெற்றிகரமாக வழங்கி வருகின்றன என்பதுடன், தற்போதுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுத்து, உள்நாட்டு சந்தைக்கு இறக்குமதி மாற்றீடு வழங்குவது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் நிம்மதியை அளித்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அவ் உற்பத்திகளினை அறிமுகப்படுத்துவதற்கு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதும் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதுடன், இதனூடாக விரிவான விளம்பர நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் வழங்குவதற்கு இயலுமை கிடைத்துள்ளது.

### சவால்கள்

கடந்த வருடத்தினுள் நாட்டில் இடம்பெற்ற சமூகப் பொருளாதார நிலைமையின் கீழ் அரச செலவுகளினைக் குறைப்பதற்கு கிடைத்துள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நேர்ந்தமையினூடாக திட்டமிட்டவாறு உற்பத்திக் கிராமங்களினை அமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதை முன்னெடுப்பதற்கு இயலாது போயுள்ளமை.

### எதிர்கால இலக்குகள்

- புதிய உற்பத்திக் கிராமங்களினை அமைத்தல் மற்றும் கடந்த வருடத்தினுள் அமைக்கப்பட்ட உற்பத்திக் கிராமங்களுக்குத் தேவையான மேம்பாட்டினை முன்னெடுத்தல்.

(புதிய உற்பத்தியாளர்களினை நிகழ்ச்சித் திட்டத்தினுள் உள்வாங்குதல், உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு மற்றும் உற்பத்தித் திறனினை மேம்படுத்துவதற்கு உதவும் பொருட்டு புதிய பொறிமுறைகளினை வழங்குதல், புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியினை வழங்குதல்.)

- உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

(உற்பத்திகளினை உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளுக்கு முன்வைத்தல் தொடபில் மிகவும் விரிவான விளம்பரத்தினை வழங்குதல், உற்பத்திக் கிராமங்கள் தொடர்பில் புதிய சந்தையினை திறந்து வைத்தல்)

## II. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

| | மொத்த வருடாந்த ஒருக்கீடுகள் (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 32.00 | 32.00 |
| மீண்டுவரும் | 7,520 | 3,317.61 |

### 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் புதிய சட்டவரைவு

இச்சட்டம் தற்போதைய சமூக முறைமைக்கு ஒத்தாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கென ஆகக்கூடிய நியாயத்தினைப்பெற்றுக் கொடுப்பதற்கு மீளவும் திருத்தும் செயற்பாடுகளினை முன்னெடுத்து புதிய சட்டவரைவு, சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### சைகை மொழிற் சட்டவரைவு

சைகை மொழியினை அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் ஊடகமொன்றாக அமைப்பதற்கு அமைச்சின் அவதானிப்புக்கு இணங்க சட்டவரைஞர் திணைக்களத்தினூடாக தயாரிக்கப்பட்ட சைகை மொழிச் சட்ட வரைவு நீதியரசர் திணைக்களத்தின் அனுமதிச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பிரசித்திபெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்களினை, அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடிய முறையில் அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது காணப்படும் நிலைமைக்குப் பொருந்தும் வகையில் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய துறை தொடர்பில் நிபுணத்துவத்தினைக் கொண்ட குழுவினூடாக திருத்தம் இடம்பெற்று வருகிறது.

### 03 பாதுகாப்பு நிலையங்களினை அமைத்தல்

நாடுபூராவும் 6 பாதுகாப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு அமைப/18/0755/711/015 என்ற இலக்க பத்திரத்தினூடாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவரையில், கம்பகா - மீரிகம, மாத்தளை – தம்புள்ள என்றவாறு காணிகளினை இனங்கண்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாத்தறை அக்குரஸ்ஸ நிலையத்தின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் இறுதிக்கட்டதிற்கு வந்துள்ளது.

### குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5,000/- மாதாந்த வாழ்வாதார உதவிக் கொடுப்பனவினை வழங்குதல்.

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்தும் நோக்குடன் இக்கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை மற்றும் திசம்பர் மாதங்களில் திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் கொடுப்பனவு இடம்பெறுவதுடன், அதன் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

- ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு - ரூ. 4860 மி.
- செலவு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு - ரூ. 2,153 மி.
- பயனாளிகளின் எண்ணிக்கை - 72,000

மே மாதம் தொடக்கம் யூலை வரை உலக வங்கி நிதியத்தினூடாகவும், செப்ரெம்பர் தொடக்கம் நவம்பர் மாதம் வரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் இக் கொடுப்பனவுச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது. அதன் முன்னேற்றம் பக்க இலக்கங்கள் 45 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

## விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல்.

சுமார் 147 படுக்கையிலுள்ள நோயாளர்கள் தொடர்பில் சேவைகளினை வழங்கும் இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் ரூபா. 0.666 மில்லியன் என்றவாறு ரூபா. 8. மில்லியன் நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## குறைந்த வருமானப் பயனாளிகளான சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5000/- மாதாந்த வாழ்வாதார உதவிக் கொடுப்பனவினை வழங்குதல்.

முழையிலேயே இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுகிறது. ரூபா. 3000 வாழ்வாதார உதவியொன்றாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது ரூபா. 5000 வாழ்வாதார உதவியாக அமுலாக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் பரிந்துரையுடன் தீராத சிறுநீரக நோய் பரவியுள்ள 11 மாவட்டங்களிலுள்ள 84 பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நோயாளர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. 2020 செப்ரெம்பர் மாதம் தொடக்கம் முழுநாட்டினையும் உள்ளடக்கும் வகையில் சகல வகையிலான சிறுநீரக நோயினால் வருந்தும் 39,169 பயனாளிகளுக்குக் கொடுப்பனவினைச் செய்வதற்கு முடிந்துள்ளது. 2022 மே, யூன், யூலை மாதங்களுக்கு உலக வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் சிறுநீரக நோய்க்காக உதவி கிடைக்கும் பயனாளிகளுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவுக்கு மேலாக ரூபா. 2500/- மேலதிகக் கொடுப்பனவு மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக செப்ரெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய 03 மாதங்கள் தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான கொடுப்பனவு விவரங்கள் பக்க இலக்கம் 46 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

## அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பிரத்தியேகத் துறையில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

தொழிலில் ஈடுபடக்கூடிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் பிரத்தியேகத் துறையின் தொழிலுக்கு முன்வைக்கப்படுவர் என்பதுடன், அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் சம்பளத்திலிருந்து 50% (ஆகக்கூடியது ரூபா. 15,000 என்றவாறு) 24 மாதங்களுக்கு இவ் அலுவலகத்தினூடாக கொடுப்பனவினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில், பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களினை அடையாளம் காணுதல், தொழில்களினை வழங்குவதற்கு இணக்கத்தினைத் தெரிவிக்கும் பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அதன் பிரகாரம், சகல மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்துரையாடல்களினூடாகவும் அதேபோல சுற்றுநிரூபத்தினூடாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர் என்பதுடன், உடன்படிக்கையொன்றினூடாக பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அடையாளம் காணப்பட்ட சுமார் 105 அங்கவீனமுற்ற நபர்களினை, 2020 ஆம் ஆண்டில் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி அதேபோல தொற்று நோயாளர்களினைக் காரணமாகக் கொண்டு பிரத்தியேகத் துறையில் புதிய ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டமை, முன்னெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டமையின் காரணமாக வருட நிறைவில் பயனாளிகளின் எண்ணிக்கை 01 என வரையறுக்கப்பட்டது. புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான கேள்வி பாரியளவில் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளது. தொழில்களினை வழங்குதல் தொடர்பில் பிரத்தியேக நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டில் பாரிய எண்ணிக்கையினருக்கு தொழில் பயிற்சி வாய்ப்புக்களினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **105** | 10 | 2.77 |

## மருத்துவ உதவிகளினை வழங்குதல்

அரச மருத்துவசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளினை வழங்குவதற்கும், சிகிச்சைகளுக்குச் செல்லுவதற்கும், இருதயம், கண்வில்லைகள், சிறுநீரகம், மூளை, இடுப்பு எலும்பு மற்றும் கோக்லியர் உள்வைப்புகள் போன்ற வேண்டிய சத்திர சிகிச்சைக்குத் தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்குமென, ரூபா. 6000 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை இதன் கீழ உதவிகள் வழங்கப்படுகின்றது. கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக திட்டமிடப்பட்ட நடமாடும் சேவைகளினை நடாத்துவதற்கு இயலாது போகுதல், அந்நிகழ்ச்சித் திட்டத்தில் மீதமாகக் காணப்பட்ட ஒதுக்கீடுகள், அச்சடித்தல் செயற்பாடுகள் இடம்பெறாமையின் காரணமாக மீதமாகிய ஒதுக்கீடுகள், நாட்டில் நிலவிய நெருக்கடி நிலையின் காணரமாக கூட்டங்களினை நடாத்துதல் வரையறுக்கப்படுதல் மற்றும் Zoom தொழில்நுட்பத்தினூடாக நடாத்தப்பட்டமையின் காரணமாக பிற மற்றும் நிர்வாகச் செலவுகள் மீதமாகியமை, பொருளாதார நெருக்கடியின் காரணமாக விலைகள் உயர்ந்தமையின் காரணமாக கொள்முதல் செயற்பாடுகளின் சிக்கல்கள் காரணமாக தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டும்போது உதவிகள் வழங்குதல் வரையறுக்கப்படுதல். அம் மீதிகளினைப் பயன்படுத்தி மருத்துவ உதவிகளினை, காத்திருப்புப் பட்டியலிலுள்ள அதிகமான தொகுதியினருக்கு வழங்குவதற்கு முடிந்துள்ளது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **683** | 6 | 10.44 * |

* உதவி உபகரண நிகழ்சித் திட்டத்தின் மூலம் மீதமான ரூபா. 0.72 மில்லியன் அச்சடிப்பு மற்றும் பிரசுரிப்புச் செயற்பாடுகளினால் மீதமாகிய ரூபா. 01.00 மில்லியன் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளினால் மீதமாகிய ரூபா. 2.48 மில்லியன், தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுவதன் மூலம் மீதமான ரூபா. 0.4 மில்லியனும் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## உதவி உபகரணங்களினை வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒன்றுதிரட்டும் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினைச் சுயாதீனமான நபர்களாக உருவாக்குவதற்கும் குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு, மூக்குக் கண்ணாடிகள், சக்கரநாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், முச்சக்கர வண்டிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்றவாறும், காற்று மெத்தை, நீர் மெத்தை போன்ற விசேட உபகணரங்கள் தொடர்பிலும் ஆகக்கூடியது ரூபா. 20,000/- வரையான நிதியுதவிகளினை வழங்குவது இடம்பெறுகிறது. செவிப்புலக் கருவிகளினைப் பெறுவதற்கு ரூபா. 15,000/- தொடக்கம் ரூபா. 35,000/- வரையிலான நிதிந உதவியினை வழங்குதல் இடம்பெறுகிறது. குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு மருத்துவப் பரிந்துரைகளின் கீழ் இவ்வுதவி லழங்கப்படுகிறது. இவ்வருடத்தில் 19 நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு உபகரணங்கள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிவலிய தொற்றுநோய் நிலை, எரிபொருள் நெருக்கடியின் காரணமாக நடமாடும் சேவைகளினை நடாத்துவது வரையறுக்கப்பட்டுள்ளது.

| கொமட் சக்கர நாற்காலிகள் | சக்கர நாற் காலி கள் | கையூன்று கோல் கள் | ஊன்று கோல்கள் | வோக்கர் | சிறுவர் சக்கர நாற்காலிகள் | மூக்குக் கண்ணாடி கள் | விசேட உபகர ணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 31 | 09 | 05 | 10 | 31 | 13840 | 16 |

## திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களினதும் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்கும் விசேடக் கல்வி அலகுகள் தொடர்பிலும் அவர்களின் விளையாட்டுக்கள், கலைகள், அழகியல் திறன்கள் மற்றும் பிற கெட்டித்தனங்களினை மெருகூட்டும் நோக்குடன் ரூபா. 50,000 ஆகக்கூடியதன் கீழ் நிதி அனுசரணை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகிறது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக விலையேற்றத்தின் காரணமாக பொருட்களினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் கொள்முதல் பிரச்சினைகள் எழுந்தமையின் காரணமாக வருடத்தின் ஆரம்ப காலாண்டுகளில் இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் விண்ணப்பங்கள் கிடைத்தல் வரையறுக்கப்பட்டிருத்தல்.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **06 நிறுவனங்கள்** | 0.5 | 0.3 |

## சுய தொழில் உதவிகளினை வழங்குதல்

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களில் காணப்படும் வறுமையினைக் குறைப்பதற்கு சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்கு நபர் ஒருவருக்கு அல்லது குடும்பமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 25,000 வரையான சுயதொழில் உதவிகளினை வழங்குவது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறுகிறது. அதேபோல, சுய தொழில்களிளை ஒழுங்குபடுத்தல், உற்பத்திகளினை தரமிக்கதாக மேம்படுத்துவதற்கு வழிகாட்டல் மற்றும் விற்பனை தொடர்பான தலையீடும் இங்கே இடம்பெறுகிறது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **156 பயனாளிகள்** | 4 | 4.06* |

தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுவதன் மூலம் மீதமாகிய ரூபா. 0.4 மில்லியன் ஒதுக்கீடுகள் சுய தொழில் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காத்திருப்புப் பட்டியலிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## கல்வி உதவிகளினை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்ற பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்நாள்பூராவும் ஒரு தடைவை கிடைக்கப் பெறும் வகையில் ஆகக்கூடியது ரூபா. 10,000 என்றவாறு கல்வி உதவிகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **421 பயனாளிகள்** | 4 | 4.31 * |

## தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுதல்.

இச் செயலகத்தின் கீழ் 238 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்படுவதுடன், இந் நிறுவனங்களில் அநேகமானவை முறைசார் நிதியுதவி கிடைக்கப் பெறாத நிறுவனங்களாகும். கிடைக்கும் வேண்டுகோள்களுக்கமைவாக, களப் பரீட்சிப்பினூடாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்நிறுவனங்களின் பௌதிக நிர்மாணிப்புத் தொடர்பில் ரூபா இரண்டு இலட்சம் வரை நிதியுதவியினை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் நடவடிக்கை எடுக்கிறது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **03 நிறுவனங்கள்** | 1 | 0.6 |

## சர்வதேச அங்கவீனமுற்றோர் தினக் கொண்டாட்டம்

இத்தடைவை சர்வதேச அங்கவீனர் தினக் கொண்டாட்ட வைபவம் “ஒரு அணுகக்கூடிய நியாயமான உலகினை வளர்ப்பதில் புதுமையான நுட்பங்களினைப் பயன்படுத்தி உள்ளடக்கிய வளர்ச்சிக்கான உருமாறும் தீர்வுகள்” என்ற தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு அலரி மாளிகையில் சர்வதேச அங்கவீனர் தின வைபவம் நடாத்தப்பட்டது. 2022 பராஒலிம்பிக் மற்றும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு நிகழ்வில் விசேட திறன்களினைக் காட்டிய 10 பேருக்கு ஞாபகார்த்த கேடயங்கள் பல்கலைக்கழகம் செல்லவுள்ள குறைந்த வருமானம் பெறும் மாணவ மாணவிகள் 10 பேருக்கு ரூபா. 75,000/- என்றவாறு பணப் பரிசில்களினை வழங்குதல் இடம்பெற்று அவர்கள் பாராட்டப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 2.87 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
எந்தவொரு வருமானமுமற்ற காணி தொடர்பில் உரித்தினைக் கொண்டிருந்தபோதும் வீடொன்று இல்லாத அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடு ஒன்றினைக் கட்டும் நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுவதுடன், தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சீட்டிழுப்பினூடாக கிடைக்கப் பெறும் வருமானத்திலிருந்து 5% வருடந்தோறும் இந்நிதியம் தொடர்பில் ஒதுக்கி நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 250,000 நிதியும், பழுதுபார்ப்பதற்கு ரூபா. 150,000 நிதியும் தவணை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஒதுக்கீடுகள் போதாமையின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் மந்தகதியிலுள்ளது என்பதுடன், வீட்டுக் கனவுடன் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களின் எண்ணிக்கை 1650 க்கும் அதிகமாகும்.

## வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்

| பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **113** | 12 | 9.36 |

## எதிர்கால இலக்குகள

- 2023 ஆம் ஆண்டில் 50 அங்கவீனமுற்ற நபர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுதல்.
- சைகைமொழி சட்டவரைவு அங்கீகரிக்கப்படுதல்.
- தற்போது திருத்த மட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்பு வசதிகளினை வழங்கும் வர்த்தமானிச் செயற்பாடுகள் நிறைவு பெறுதல்.
- 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைத் திருத்தம் நிறைவு பெறுதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் 03 நிறுவனங்களினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சைகை மொழியினை அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேலதிக பாடமாக அமைத்தல்.

## III. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம்

முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறும் இரு முறைகள் காணப்படுகின்றன. அவை,

- திறைசேரி ஒதுக்கீடுகள்
- முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியம்

### மொத்த திறைசேரி ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீடுகள் | மொத்த வருடாந்த ஒதுக்கீடுகள் | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 5 | 2.00 |
| மீண்டுவரும் | 13,766.09 | 8,082.67 |

### அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்.

| ஒதுக்கீடுகள் | நிகழ்ச்சித் திட்டம் | மொத்த வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| மீண்டுவரும் | முதியோர் பயன் நிகழ்ச்சித் திட்டம் | 23.16 | 2.00 |
| | 70 வயதிற்கும் அதிகமான குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கு ரூபா. 2000/- என்றவாறான சிரேஸ்ட பிரஜைகள் கொடுப்பனவு. | 13,550.01 | 7,888.93 |
| | 100 வயதினைப் பூர்த்தி செய்துள்ள சிரேஸ்ட பிரஜைகளுக்கு ரூபா. 5000/- என்றவாறான கொடுப்பனவினை வழங்குதல். | 33.59 | 33.59 |
| | **மொத்தம்** | **13,606.76** | **7,924.52** |

### திறைசேரி ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.

- கிராம முதியோர் சங்கங்களினை வலுவூட்டுவதற்கான ஒழுங்குவிதிகளினை அச்சிடுதல்.
- பாடசாலை மாணவர்கள் மற்றும் ஓய்வு பெறுவதற்கு ஆயத்தமாகும் நபர்கள் தொடர்பில் 4 மாவட்டங்களில் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- 183 நபர்கள் தொடர்பில் முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குதல் மற்றும் 40 லமினேட் செய்யும் எந்திரங்களினைக் கொள்வனவு செய்தல்.
- முதியோர் இல்லங்களினைப் பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் தரப்படுத்துதல்.

- 197 முதியோர்களுக்கு சுயதொழில் உதவியினை வழங்குதல்.
- 9 தேசிய சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுதல்.
- சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்

## முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியம்

| மொத்த வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|
| 763.35 | 533.03 |

- தொற்றாத நோய்களினால் பீடிக்கப்பட்ட 855 முதியோர்களுக்கு தலா நபர் ஒருவருக்கு ரூபா. 25,000/- என்றவாறு வழங்குதல்.
- குறைந்த வருமானம் பெறும் 272 முதியோர்களுக்கு செவிப்புலக் கருவிகளினை வழங்குதல்.
- 145 நபர்களுக்கு முதியோர்களினைப் பராமரித்தல் தொடர்பிலான பயிற்சியினை வழங்குதல்.
- கதிர்காமம் முதியோர் இல்லத்தினை நிர்மாணிக்கும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- 14 முதியோர் இல்லங்களினைப் பழுதுபார்க்கும் செயற்பாடு தொடர்பில் ரூபா. 1 மில்லியன் என்றவாறு புதுப்பிக்கும் செயற்பாடுகளுக்கு வழங்குதல்.
- 25 பகல்நேர நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு தலா நிலையமொன்றுக்கு ரூபா. 2.5 மில்லியன் என்றவாறு வழங்குதல்.
- "திரிய பியச" வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற குறைந்த வருமானம் பெறும் முதியோர்களின் 50 வீடுகளினை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்க்கும் செயற்பாடுகளுக்கு ரூபா. 3.5 மில்லியன் ஆகக்கூடியதன் கீழ் நிதியுதவியினை வழங்குதல்.
- "சுவ பகசு" (இலகு) நிதியுதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தமக்கு உரித்தான வீடுகளுக்கு ஆகக்குறைந்த வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் தேவையான முதியோர்களுக்கு பிரதேச செயலகமொன்றிலிருந்து 6 முதியோர்கள் தொடர்பிலும், ஆகக்கூடியது ரூபா. 50,000/- என்பதன் கீழ் 2071 முதியோர்களுக்கு வசதிகளினை வழங்குதல்.
- பாத யாத்திரை செல்லுவதற்கு 135 முதியோர்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்.
- 663 கிராம முதியோர் சங்கங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்.
- 17 முதியோர் பகல்நேர நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நிதியுதவியினை வழங்குதல்.
- அவசர நிலையிலுள்ள 03 முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்.
- பகல்நேர நிலையங்களிலுள்ள முதியோர்களுக்கு உடனடி கல்வியறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஊக்கமளிக்கும் யோகா நிகழ்ச்சித் திட்டங்கள் 4 நடாத்தப்படுதல்.
- முதியோர் இல்லங்களிலிருந்து பொருளாளர்கள் தொடர்பில் திறன் விருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் 27 நடாத்தப்படுதல்.

## விசேட சாதனைகள்

i. 2022 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் எதிர்கால தொலைநோக்குடனான மூலோபாயத் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ii. மூலோபாயத் திட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட இலங்கை வாழ் சிரேஸ்ட பிரஜைகள் தொடர்பிலான தேசியப் பட்டயம் மற்றும் தேசியக் கொள்கையினைத் தயாரித்தல் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது.

## அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

i. திறைசேரி நிதியத்தின் கீழ் இடம்பெறும் 70 வயதிற்கு மேற்பட்ட குறைந்த வருமானப் பயனாளிகளான முதியோர்களுக்கு ரூபா. 2,000/- என்றவாறு சிரேஸ்ட பிரஜைகள் கொடுப்பனவு வழங்கும் செயற்பாடுகள் மற்றும் 100 வயதினைப் பூர்த்தி செய்துள்ள சிரேஸ்ட பிரஜைகளுக்கு ரூபா. 5,000/- என்றவாறான கொடுப்பனவுச் செயற்பாடுகளினை முன்னெடுக்கும்போது உதவியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இயலாத பாரிய தொகை முதியோர்கள் காத்திருப்புப் பட்டியலிருத்தல்.
ii. பாரியளவிலான முதியோர்களினை, முதியோர் இல்லங்களுக்கு அனுப்பும் போக்கு காணப்படுவதுடன், போதிய இட வசதிகளில்லாமையினால் சிக்கலாகவுள்ளது.

## எதிர்கால இலக்குகள்

i. 2022 ஆம் ஆண்டில் களுத்துறை, கேகாலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களின் முதியோர் இல்லங்களின் காப்பாளர்களுக்கு, முதியோர் பராமரிப்புப் பயிற்சி உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் சகல மாவட்டங்களிலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், முதியோர்களுக்கென பராமரிப்பினைச் செய்யக்கூடிய பராமரிப்பு ஊழியர்கள் 1000 பேருக்கு பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## IV. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

- பெல்ஜியம் லிவின் லிங்க்பேர்க் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அதனூடாக சமூகப் பணி மற்றும் சிறுவர் விருத்தி தொடர்பிலான புதிய பாடநெறிகள் தொடர்பில் பரஸ்பர கருத்துக்களினைத் தெரிவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை விரிவுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- இலங்கையினுள் சமூகப் பணிக் கல்வி தொடர்பில் தொழில்வாண்மை அங்கீகாரத்தினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு UNICEF நிறுவனத்தின் அனுசரணை கிடைத்துள்ளது.

### திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

### 1. சமூக சேவைக் கல்லூரியினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்

சமூக சேவைகள் கல்லூரியின் கீழ் இப்பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் பின்வரும் சமூகப் பணி தொடர்பிலான முதுமாணிப் பாடநெறிகளினை(MSW) நடாத்துவதற்கு ரூபா. 4.78 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், இப்பாடநெறிகளுக்கு 150 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். (பணம் அறவீடு செய்யப்படும்).

சமூகப் பணி தொடர்பிலான இளங்கலை (BSW) பாடநெறிகள் மற்றும் உயர் டிப்ளோமாப் பாடநெறிகளுக்கு 800 மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர் என்பதுடன் அது தொடர்பில் ரூபா. 4.1 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2. பயிற்சிப் பிரிவினூடாக சமூகத் தேவைப்பாட்டின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

இப்பிரிவினூடாக நடாத்தப்பட்ட பாடநெறிகள், கொழும்பு தலைமை நிலையத்திலும், ரன்ன, தலாவ, அம்பாறை, கிளிநொச்சி, திருகோணமலை, மாத்தறை, குருனாகல், மட்டக்களப்பு, இரத்தினபுரி, கண்டி போன்ற நகரங்களினை மையமாகக் கொண்டும் 14 பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன. அது தொடர்பில் ரூபா. 71,868.00 செலவு செய்யப்பட்டுள்ளது.

### ➢ டிப்ளேமாமாப் பாடநெறிகள் (பணம் அறவீடு செய்யப்படுகின்ற)

இப் பிரிவினூடாக 2019 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட டிப்ளோமாப் பாடநெறிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாறை, திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் தமிழ் மொழியிலும், குருனாகல், இரத்தினபுரி, தலாவ, சீதுவ, ரன்ன மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களில் சிங்கள மொழியிலும், சீதுவ மாவட்டத்தில் மாத்திரம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கு ரூபா. 18.83 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 3. சமூக அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவினூடாக முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் வெளியீடு செய்யப்பட்ட பிரசுரங்கள்.

i. கல்விச் செயற்பாடுகள் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சமூகப் பணி நாளேடு வருடாந்தம் 2 சஞ்சிகைகள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தச் செலவு ரூபா. 0.03 மில்லியனாகும்.
ii. இணையத் தளத்தினூடாக வெளியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இரண்டு சஞ்சிகைள் தற்போது வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவு ருபா. 0.03 மில்லியனாகும்.
iii. செய்திக் கதிர் அச்சடிக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன் இணையத்தளத்தினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவு ரூபா. 0.03 மில்லியனாகும்.
iv. கொவிட் 19 வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்ட சமுதாயம் குணமடைந்ததன் பின்னர் சமூகங்களுக்கிடையே தொடர்புகளினை முன்னெடுக்கும்போது முகங்கொடுக்கும் உளச் சமூகப் பிரச்சினைகள் தொடர்பிலான ஆய்வு – கற்கை ஆய்வு அறிக்கை நிறைவு பெற்றுள்ளது. மொத்தச் செலவு ரூபா. 0.05 மில்லியனாகும்.
v. கொவிட் 19 இன்போது சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. – மொத்தச் செலவு ரூபா. 0.05 மில்லியனாகும்.
vi. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டிடத் தொகுதியின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

இக்கட்டிட நிர்மாணிப்பு 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஒக்டோபர் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம், A மற்றும் B என இரு பகுதிகளினை உள்ளடக்கியுள்ளன.

| மதிப்பீடு செய்யப் பட்ட மொத்தச் செலவு (ரூ.மி.) | 2017.01.01 தொடக்கம் 2021.12.31 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022 ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு (ரூ.மி.) | 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2017.01.01 தொடக்கம் 2022.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2022.09.30 வரை பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| **1,000.00** | 750.45 | 60 | 48.30 | 798.75 | A - பகுதி - (97.1%)<br>B - பகுதி - (100%) |

## VII. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

### 2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான ஆட்சேர்ப்பு மற்றும் பயன் கொடுப்பனவுகளின் முன்னேற்றம்

### அங்கத்தவர்கள் ஆட்சேர்ப்பு

| 1996.01.01 தொடக்கம் 2021.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.12.31 வரையிலான மொத்தச் சேகரிப்பு | |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்களின் எண்ணிக்கை | முதலாவது தவணை தொகை (ரூ.மி.) | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | முதலாவது தவணை தொகை (ரூ.மி.) | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | முதலாவது தவணை தொகை (ரூ.மி.) |
| 834,796 | 638.84 | 56,764 | 114.60 | 891,560 | 753.44 |

## பயன்கள் கொடுப்பகனவு

### I. ஓய்வூதியக் கொடுப்பனவு

| 1996.01.01 தொடக்கம் 2021.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.12.31 வரையிலான சேகரிப்பு | |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) |
| 32,976 | 2,622.65 | 34,132 | 379.91 | 34,132 | 3,002.56 |

### II. பணிக் கொடை மற்றும் மேலதிகப் பயன்களினைச் செலுத்துதல்.

| விவரம் | 1996.01.01 தொடக்கம் 2021.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான சேகரிப்பு | | 2022.12.31 வரையிலான மொத்தச் சேகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) |
| மரண பணிக் கொடை | 2,293 | 41.01 | 40 | 1.48 | 2,333 | 42.49 |
| முழுமையான அங்கவீனப் பணிக் கொடை | 35 | 1.07 | - | | 35 | 1.07 |
| பகுதியளவிலான அங்கவீனப் பணிக் கொடை | 75 | 1.18 | - | | 75 | 1.18 |
| முழுமையான அங்கவீன மாதாந்தக் கொடுப்பனவு | 27 | 8.16 | 27 | 0.53 | 27 | 8.69 |
| "ஆரஸ்ஸாவ" முன் திட்டமிடல் பிரேரணைத் திட்டத்தின் மேலதிக பயன்களினை வழங்குதல். | 1,590 | 43.36 | 418 | 4.91 | 2,008 | 48.27 |

## விசேட சாதனைகள்

- 2022 ஆம் ஆண்டினுள் புதிய அங்கத்தவர்கள் 56,074 பேரினை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் 34,132 பேருக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்குதல். அதற்கு மேலதிகமான அங்கத்தவர்களுக்கு அங்கவீனப் பணிக் கொடை, மரணப் பணிக் கொடை, கல்வி தடைதாண்டல் பயன்கள் உட்பட பிற பயன்கள் வருடத்தினுள் வழங்கப்பட்டுள்ளன.
- வணிகக் கடல் செயலகத்துடன் இணைந்து மாலுமிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட "மாலுமிகள்" சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டத்தினை செயலாக்குவதற்கான சட்டவிதிகளினை உள்ளடக்கிய வர்த்தமானியொன்றினை வெளியீடு செய்தல்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான “மனுசவி” ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை மக்கள்மயப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஒப்பமிடுதல்.
- பிக்குமார்களின் பெற்றோர்களுக்கு “புது பூன் மாபிய கரசர” என்ற பெயரில் ஓய்வூதியப் பிரேணைத் திட்டமொன்றினை பிரகடனப்படுத்துதல் மற்றும் பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்குவதற்குத் தேவையான உதவிப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பௌத்த அலுவல்கள் திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினைச் செய்தல்.
- சௌபாக்யா பணியகத்துடன் இணைந்து “சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் கீழ் வலுவூட்டப்பட்ட தொழில்முனைவோர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்.
- பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பான ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரேரணைத் திட்டத்தினை ஆரம்பித்தல்.

## சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

- ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டில் புதிய அங்கத்தவர்கள் 42,500 பேரினை (சகல செயற்திட்டங்களினூடாக இடம் பெற்றுவரும் ஆட்சேர்ப்புடன்) ஆட்சேர்ப்புச் செய்தல்.
- தொழில்முனைவோர்களுக்கான புதிய ஓய்வூதியப் பிரேரணைத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனூடாக நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முனைவோர்களினினை உருவாக்குதல், பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுதல்.
- வணிகக் கடற்படையினரினை, “மாலுமி” சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளுதல்.
- “புது பூன் மாமிய கரசர” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிக்குமார்களின் பெற்றோர்களினை ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்குள் சேர்த்தல்.
- வலுவூட்டப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளினை ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்திற்குள் சேர்த்தல்.
- “சௌபாக்யா பணியகத்துடன் இணைந்து, “சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின்’ கீழ் வலுவூட்டப்பட்ட தொழில்முனைவோர்களினை ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணை தொடர்பில் அங்கத்துவராக்குதல்.
- பெருந்தோட்ட மனித வளத்துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தல் மற்றும் அதனூடாக தோட்டத் தொழிலாளர்களினை ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரேரணைத் திட்டத்திற்குள் சேர்ப்பதை முறைசார்படுத்துதல்.
- மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைச் செய்தல் மற்றும் அதனூடாக சுரங்கத் தொழிலாளர்களினை ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு அங்கத்தவராக்குதல்.
- பாடசாலை மாணவர்களுக்கிடையே சமூகப் பாதுகாப்புத் தொடர்பிலான அறிவு மற்றும் புரிந்துணர்வினை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை நாடளாவிய ரீதியில் அமுலாக்குதல்.
- சுய தொழில்களுக்கு முன்வைப்பதற்கு இளைஞர் யுவதிகளினை வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு உதவியினை வழங்குவதற்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிணைந்த ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத் தொடரினை நடாத்துதல்.
- சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் டிப்ளோமா பாடநெறியொன்றினை ஆரம்பித்தல்.
- “கலைஞர்கள்” ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு கலைஞர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.
- சமூகப் பாதுகாப்புத் தொடர்பிலான அறிவினை மேம்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு விடயத்தினை பாடசாலை பாடத்திற்குள் உள்வாங்குதல்.

# V. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

## 2022.12.31 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

